# 3. வினாக்கள்—விடைகள்

## உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 1, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன், மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**1—**

### திண்காரைத் தளம்

***55403—திரு. கே.ஏ. செங்கோட்டையன்:**

மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், தடப்பள்ளி-அரக்கன்கோட்டை மீதமுள்ள 50 சதவிகித வாய்க்கால் திண்காரைத் தளம் அமைக்கும் பணியினை மீண்டும் துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், தடப்பள்ளி—அரக்கன்கோட்டை வாய்க்காலில் திண்காரைத் தளம் அமைக்கும் பணியில், 50 சதவிகிதப் பணிகளுக்காக ரூ.40.55 கோடி நிதி ஒதுக்கப்பட்டு, திண்காரை அமைக்கப்பட்டு, எல்லா பணிகளும் 100 சதவிகிதம் வெற்றிகரமாக முடிக்கப்பட்டுள்ளன. மேலும், மீதி இருக்கிற இடங்களில் பணிகளைச் செய்ய வேண்டுமானால் அந்தப் பணிகளுக்குத் தக்க அளவிற்கு நிதியிருக்கிற நேர்வில், அந்த பணிகளும் எடுத்துக்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள்.

முற்பகல் 10–10

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாற்பது கோடியே ஐம்பத்து ஐந்து

*2024 பிப்ரவரி 13]*

*இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 2019–2020 ஆம் ஆண்டு, இன்றைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதுதான், அதற்குரிய நிதி ஒதுக்கப்பட்டு, அப்பணிகள் இரண்டாண்டு காலத்தில் முடிக்கப்பட்டன. அப்பணிகள் முடிக்கப்பட்டபோது, 26 கி.மீ. நீளத்திற்கு அங்கே திண்காரைச் சுவர் மட்டும் கட்டப்பட்டது. முழுமையாக கான்கிரீட் 6 கி.மீ. நீளத்திற்குப் போடப்பட்டிருக்கிறது. அதேநேரத்தில், தடப்பள்ளி–அரக்கன்கோட்டை வாய்க்காலின் கிளை வாய்க்காலாக இருக்கின்ற சிங்கம் பிரிவு வாய்க்கால், நீண்ட நெடுங்காலத்திற்கு முன்பு, அதாவது சுமார் 300 ஆண்டு காலத்திற்கு முன்பு அமைக்கப்பட்ட வாய்க்கால் ஆகும். அதிலே தண்ணீர் செல்கிறபோது, அடிக்கடி கிளை வாய்க்காலில் உடைப்பு ஏற்படுகிறது. அதேநேரத்தில் வெள்ளப்பெருக்கு ஏற்படும் நேரங்களில், குறிப்பாக கோபிச்செட்டிப்பாளையத்திலிருந்து தண்ணீர் வருகிறபோது, அடிக்கடி அந்த வாய்க்கால் உடைகின்ற நிலை இருக்கிறது. ஆகவே, இதை மனதிலேகொண்டு, அதைச் சீர் செய்யும் பணிகளை இந்த ஆண்டே துவங்குவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி பெருவாய்க்காலைப் பற்றியது; துணைக் கேள்வி சிறுவாய்க்காலைப் பற்றியது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன காரணத்தால், அந்தப் பணியையும் செய்துதர நடவடிக்கை எடுக்கப்படும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள்.*

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதுதான், 60 ஆண்டு கனவுத் திட்டமான அத்திக்கடவு–அவினாசி திட்டம் 1,652 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டு, 90 சதவிகிதப் பணிகள் முந்தைய ஆட்சியில் முடிக்கப்பட்டன. (மேசையைத் தட்டும் ஒலி) மீதமுள்ள 10 சதவிகிதப் பணிகளும், தற்போதைய இரண்டாண்டு ஆட்சிக் காலத்தில் முடிக்கப்பட்டுள்ளன. இருந்தபோதிலும், சோதனை*

ஓட்டத்தின்போது, சில ஏரிகளுக்கும், குளங்களுக்கும் தண்ணீர் வரவில்லை என்பதால் ஓர் அச்சம் அப்பகுதி மக்களிடத்தில் இருக்கிறது. அதை உடனடியாக அரசு பரிசீலிக்குமா என்பதையும், விடுபட்டிருக்கின்ற ஏரிகள், குளங்களையும் இத்திட்டத்தில் சேர்ப்பதற்கு இந்த ஆண்டு அரசு முயற்சிகளை மேற்கொள்ளுமா என்பதையும் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்திட்டப் பணிகள் பெரும்பாலும் முடிந்துவிட்டன. சிலநேரங்களில் பைப்புகள் பதிக்கின்ற இடத்திலுள்ள நிலச்சுவான்தாரர்களுக்கு தர வேண்டிய பணம், பாக்கியிருக்கின்ற காரணத்தால், அதனைக் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது. விரைவில் பணிகள் முடிக்கப்பெற்று, துவக்கவிழா நடத்தப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுந்தர் அவர்கள்.

**திரு. க. சுந்தர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய திராவிட மாடல் ஆட்சியிலே நீர்வளத் துறையிலே பல்வேறு திட்டங்கள் புதியதாகக் கொண்டுவரப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. காஞ்சிபுரம்-செங்கல்பட்டு மாவட்டங்கள், ஏரிகள் நிறைந்த மாவட்டங்கள் என்று சொல்வார்கள். அந்த மாவட்டங்களிலுள்ள ஏரிகள், கால்வாய்கள், மதகுகள் பழுதடைந்திருக்கின்றன. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கான நிதியை ஒதுக்கி, அவற்றைச் சீரமைத்திட முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது உண்மைதான். பல ஆண்டுகாலமாக, அவை செப்பனிடப்படாத காரணத்தால் மதகுகள் எல்லாம் இடிந்திருக்கின்றன. இந்த ஆண்டு அப்படிப்பட்ட பழுதடைந்துள்ள ஏரிகளைச் செப்பனிடுவதற்குக்

2024 பிப்ரவரி 13]
கணக்கெடுத்திருக்கிறோம். விரைவில் அதற்கான நிதி ஒதுக்கப்பட்டு, பழுதுபார்க்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.எஸ். மணியன் அவர்கள்.

**திரு. ஓ.எஸ். மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். நாகப்பட்டினம் மாவட்டத்திலும், திருவாரூர் மாவட்டத்திலும் கிட்டத்தட்ட 1,51,000 ஏக்கர் தாளடிப் பயிர்கள் மார்ச் மாதத்தில்தான் அறுவடைக்கு வரும். எனவே, பிப்ரவரி மாதம் முழுக்க அந்தப் பயிர்களுக்குத் தண்ணீர் தேவைப்படுகிறது. தற்போது இரண்டு டி.எம்.சி. தண்ணீர் மட்டுமே திறந்து விடப்பட்டுள்ளது. விவசாயிகள், விவசாயச் சங்கங்கள் எல்லோருமே மேலும் 8 டி.எம்.சி. தண்ணீர் வேண்டுமென்று வேண்டுகிறார்கள். ஆகவே, மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள், தண்ணீரைத் திறந்துவிடுவதற்கு ஆவன செய்வார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னைவிட மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.எஸ். மணியன் அவர்களுக்கு காவிரிப் பிரச்சினை, நீர்ப் பிரச்சினையைப் பற்றி நன்றாகத் தெரியும். காரணம், அவர் அங்கே வாழ்கிறவர்; வாழ்ந்து வருபவர். இப்போது இருக்கிற நீர் குடிநீருக்கு மட்டும்தான் இருக்கிறது. இருக்கிற தண்ணீரும் இல்லாமல் போய்விட்டால் பாதிக்கப்படுகின்ற நிலைமை ஏற்படும். இருந்தாலும் தற்போது 3 டி.எம்.சி. அளவுக்குத் தண்ணீர் திறந்து விடப்பட்டிருக்கிறது. விவசாயிகள் அடுத்தடுத்து பயிரிட்டுக் கொண்டேயிருந்தால், தண்ணீர் திறந்து விட்டுக்கொண்டே இருக்க முடியாது. ஆகவே, விரைவில் மழை வரும் என்று எதிர்பார்க்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி அவர்கள்.

**திரு. மு.பெ. கிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சாத்தனூர் அணையில்

மேற்புறக் கால்வாய் அமைக்கப்பட்டு சாத்தனூர் ஏரிக்குத் தண்ணீர் வருகின்றது. தலைவர் கலைஞர் அவர்களிடத்தில் அனுமதியைப் பெற்று குப்பநத்தம் அணையைக் கட்டித்தந்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள், குப்பநத்தம் அணையில் மேற்புறக் கால்வாய் அமைத்து, குப்பநத்தம் ஏரிக்கும் தண்ணீர் தருவதற்கு புதிய கால்வாய் அமைத்துத் தருவாரா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இந்தக் கேள்வியைத் தனிக்கேள்வியாகக் கேட்டிருந்தால் சரியான பதிலைச் சொல்லியிருப்பேன். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினருடைய கேள்விக்கு விரைவில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

*முற்பகல் 10–15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. எடப்பாடி K. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் ஓமலூர், மேட்டூர், எடப்பாடி, சங்கரி ஆகிய நான்கு சட்டமன்றத் தொகுதிகள் உள்ளன. இந்த நான்கு சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட 100 வறண்ட ஏரிகளுக்கு நீரேற்று முறையின் மூலமாக நீர் நிரப்புகிற திட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு துவங்கியது. ஆனால், இப்போது அந்தப் பணி சுணக்கமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களே அப்பணிகளை நேரில் பார்வையிட்டுச் சென்று இருக்கின்றார்கள். அப்பணிகளை வேகமாக, துரிதமாக நிறைவேற்ற இந்த அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** வேகமாக, துரிதமாக இந்த அரசு நடவடிக்கை எடுக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

*2024 பிப்ரவரி 13*]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 2, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சந்திரன், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

**2—**

**கூட்டுக் குடிநீர்த் திட்டம்**

***55668—திரு. S. சந்திரன்:**

*மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருத்தணி தொகுதி, இரா.கி. பேட்டை வட்டத்திற்கு பொன்னை ஆற்றிலிருந்து கூட்டுக் குடிநீர் திட்டத்தைச் செயல்படுத்த அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி தொகுதியில் இரா.கி. பேட்டை ஒன்றியத்தைச் சார்ந்த 38 ஊராட்சிகளில் 287 குடியிருப்புகள் உள்ளன. திருத்தணி மற்றும் இரா.கி. பேட்டை ஊராட்சி ஒன்றியங்களில் அடங்கிய 9 ஊராட்சிகளில் உள்ள செருக்கனூர் மற்றும் 114 ஊரகக் குடியிருப்புகளுக்கு, பொன்னை ஆற்றிலிருந்து குடிநீர் வழங்க விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, தேவையான நீர் ஆதாரம் இல்லாததால், கொசஸ்தலை ஆற்றிலிருந்து குடிநீர் வழங்க உத்தேசிக்கப்பட்டு, ரூ.44.58 கோடி மதிப்பீட்டில் உயிர் நீர் இயக்கத்தின் (ஜல் ஜீவன் இயக்கம்) கீழ் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகள் தொடங்கப்பட்டு இதுவரை 15 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. நவம்பர் 2024-ல் அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டு, மக்கள் பயன்பாட்டுக்குக் கொண்டுவர இலக்கிடப்பட்டுள்ளது. இத்திட்டம் 53,630 நபர்கள் பயன்பெறும் வகையில் நாளொன்றுக்கு 2.95 MLD குடிநீர் வழங்கிடும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.*